| | |
|---|---|
| **PG–754** | **PGDTR–01** |

P.G. DIPLOMA EXAMINATION –
DECEMBER, 2019.

Tamil Research Methodology

ஆய்வு நெறிமுறைகள்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (3 × 5 = 15 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

1. ஆய்வு நாகரிகம் குறித்து விளக்குக.

2. கள ஆய்விற்குச் செல்லும்போது செய்ய வேண்டிய முன் தயாரிப்புகள் குறித்து விவரி.

3. அமைப்பியல் முறை ஆய்வு குறித்து விவரி.

4. மேற்கோள்களைக் கையாளும் முறைகளைத் தருக.

5. ஆய்வேட்டில் பின்னிணைப்புகள் எவ்வாறு அமைதல் வேண்டும்.

பகுதி ஆ — (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. முதன்மைச் சான்றாதாரங்கள், துணைமைச் சான்றாதாரங்கள் குறித்து விவரி.

7. வினாநிரல், பட்டியல், பேட்டி தயாரிக்கும்போது மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளை விவரி.

8. அறிவியல் முறை ஆய்வு, தருக்கமுறை ஆய்வு,, சமூகவியல் முறை ஆய்வு ஆகியவை குறித்து விவரிக்கவும்.

9. ஆய்வில் மேற்கோள், அடிக்குறிப்பு ஆகியவற்றைக் குறிப்பிடும்போது மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளை விளக்குக.

10. ஆய்வேட்டு உருவாக்கத்தின் படிநிலைகளை விளக்குக.

11. ஆய்வு நெறித்திட்டம் குறித்து விவரி.

12. ஆய்வின் வகைகள் குறித்து விவரித்து எழுதுக.

————————

| PG-755 | PGDTR-02 |
|---|---|

# P.G. DIPLOMA EXAMINATION – DECEMBER 2019.

## தமிழ் ஆராய்ச்சியின் வரலாறும் வளர்ச்சியும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — ($3 \times 5 = 15$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றுனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. நடையியல் ஆய்வு - அறிமுகம் செய்க.

2. காப்பியங்களில் சிலப்பதிகாரம் குறித்த ஆய்வுகள் அதிகம் வெளிவந்துள்ளமைக்கான காரணங்களைச் சுட்டுக.

3. தமிழாய்வுகளில் நாட்டுப்புறக் கலைகளின் தாக்கம் குறித்து எழுதுக.

4. இக்காலச் சமூகத்தை எதிரொலிப்பதில் புதுக்கவிதை குறித்த ஆய்வுகளின் பங்களிப்பைச் சுட்டுக.

5. தமிழாய்வு உலகிற்கு, க.கைலாசபதியின் பங்களிப்புக் குறித்து உரைக்க.

பகுதி ஆ — (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. சங்கத் தமிழரின் வாழ்வியல் சிறப்புகளை வெளிப்படுத்தும் சங்க இலக்கிய ஆய்வுகள் குறித்து விளக்குக.

7. உரைநடை ஆய்வு என்றால் என்ன என்பதைச் சுட்டி, தமிழில் வெளிவந்துள்ள உரைடை ஆய்வுகள் குறித்து விளக்குக.

8. தமிழில் நாட்டுப்புற ஆய்வு முன்னோடிகள் குறித்துக் கட்டுரை வரைக.

9. வரலாறு - சமூகம் - குடும்ப நாவல்கள் குறித்து வெளிவந்துள்ள முக்கிய ஆய்வுகள் பற்றி விளக்கியுரைக்க.

10. சங்க இலக்கிய ஆய்வுகளுக்கு முன்னோடியாக உ.வே.சாவின் சங்க இலக்கியப் பதிப்புகள் விளங்குவது குறித்து விளக்குக.

11. வரலாற்றுப் பேரறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வு நடை குறித்து எழுதுக.

12. இலக்கியம் - தொல்லியல் - வரலாறு என பன்முகத் தன்மையோடு பயணித்த மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் ஆய்வுப் பங்களிப்புக் குறித்துக் கட்டுரை வரைக.

| PG-756 | PGDTR–03 |
|---|---|

# P.G DIPLOMA EXAMINATION – DECEMBER, 2019.

## திறனாய்வு அணுகுமுறைகள்

Time : 3 hours    Maximum marks : 75

பகுதி அ — (3 × 5 = 15 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. வரலாற்றியல் அணுகுமுறை : வரையறை தருக.
2. மானிடவியல் அணுகுமுறையால் விளைந்த நன்மைகளை விளக்குக.
3. தத்துவவியல் அணுகுமுறை குறித்து விவரி.
4. அமைப்பியல் அணுகுமுறை குறித்து விளக்குக.
5. பெண்ணிய அணுகுமுறையின் செயல்பாட்டினை எடுத்தியம்புக.

பகுதி ஆ — (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. அறிவியல் அணுகுமுறையை வரையறுத்து அவற்றால் விளைந்த நன்மைகளைப் பட்டியலிடுக.
7. மார்க்சிய அணுகுமுறையின் இன்றியமையாமையை விளக்குக.

8. தொல்படிமவியல் அணுகுமுறை குறித்து விவரித்து எழுதுக.

9. மொழியியல் அணுகுமுறையின் பயன்பாடுகளை விளக்குக.

10. தலித்திய அணுகுமுறையின் இன்றியமையாமையும் பயன்களும் குறித்து எடுத்தியம்புக.

11. உளவியல் அணுகுமுறை குறித்து விவரித்து எழுதுக.

12. வகைமையியல் அணுகுமுறை குறித்து விவரித்து எழுதுக.

————————